செ. கு. எண்: 053 நாள்: 07.06.2019

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 7.6.2019</u>

கிருஷ்ணகிரி மாவட்டம், கால்வேஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னதேக்கன் என்பவரின் மகன் திரு. முனுசாமி மற்றும் முத்துராயன் கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மகன் திரு. சரவணன் ஆகிய இருவரும் அறுந்து விழுந்திருந்த மின் கம்பியிலிருந்து மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கீழப்பட்டமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கல்யாணசுந்தரம் என்பவரின் மகன் செல்வன் ஜெகன் என்பவர் பொது நீர்த் தொட்டியின் மின் மோட்டாரை இயக்க முற்பட்ட போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், சுண்டேகுப்பம் தரப்பு, சந்திரபிள்ளை கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்திரபிள்ளை என்பவரின் மகன் திரு. சின்னசாமி என்பவர் நீர் நிரப்ப மோட்டாரை இயக்க முற்பட்ட போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், வடக்கு தேவதானம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலமுருகன் என்பவரின் மகன் செல்வன் கணேஷ்குமார் என்பவர், எதிர்பாராதவிதமாக அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், பெரம்பூர் வட்டம், வியாசர்பாடியைச் சேர்ந்த திரு. சங்கர் என்பவரின் மகன் செல்வன் ஹரிஹரன் என்பவர் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது, அருகிலுள்ள மின்மாற்றி கேபிளை பிடித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், காவணிப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் திரு. வீரப்பன் என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது, எதிர்பாராதவிதமாக அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், பேலாளம் கிராமத்தில், அனுமந்தாபுரம் தரப்பு நெல்லுகுந்தி கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடேஷ் என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர் மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், கல்லொட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. பாபு என்பவரின் மகன் திரு. கணேசன் என்பவர், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், ஓலப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவர் மின்கம்பத்தில், பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த **பத்து** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த **பத்து நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**